# கலைகலாச்சாரச் சங்கம் முருகன் Toffen Bern
# அங்கத்தவர் கூட்டத்திற்கான அழைப்பு

மிகவும் மதிப்பிற்குரிய சங்க உறுப்பினர்களே

இத்தால் நாங்கள் உங்களை இவ்வருட அங்கத்தவர் கூட்டத்திற்கு அழைக்கிறோம்:

**திகதி மற்றும் நேரம்: ஞாயிற்றுக்கிழமை, 10. மார்கழி 2023, 13:00 மணி**

**இடம்:** BERNEXPO AG, Mingerstrasse 6, 3014 Bern, Plenarsaal இல்

**பயணவழி:** **பொதுப் போக்குவரத்தில்** வருவதானால் நீங்கள் ட்றாம் நிறுத்தம் «Wankdorf Center» வரை பயணியுங்கள். அங்கிருந்து, மண்டபத்திற்கு நடைபாதை வழிகாட்டப்படும்.

**சிற்றூர்தியில்** வருவதானால் நீங்கள் «expo Parking» an der Bolligenstrasse 61, 3006 Bernஐ பயன்படுத்துமாறு நாங்கள் விதந்துரைக்கின்றோம். அங்கிருந்து, மண்டபத்திற்கு நடைபாதை வழிகாட்டப்படும்.

தயவுசெய்து நீங்கள் இந்த அடையாளத்தைத் தொடருங்கள்:




DOMENIG & PARTNER RECHTSANWÄLTE AG
Laupenstrasse 1 | Postfach 2276 | CH-3001 Bern
Tel.: +41 31 380 11 00 | Fax: +41 31 380 11 09 | info@domenig.law
www.domenig.law

CHE-284.941.671 MWST

## 1. பங்கேற்பதற்கான முன்நிபந்தனைகள்

10. மார்கழி 2023 அங்கத்தவர் கூட்டத்தில் ஒரு செல்லுபடியான பங்குபெறும் முடிவு மற்றும் ஒரு செல்லுபடியான சுவிஸ் அடையாளப் பத்திரத்தைக் காண்பிக்கும் நபர்கள் மட்டுமே பங்கேற்கலாம். அங்கத்தவர் கூட்டத்தில் பங்கேற்பதற்கு, நீங்கள் அங்கத்தவர் கட்டணத்தை முன்கூட்டியே உரிய காலத்தில் செலுத்தியிருக்க வேண்டும். இது குறித்த மேலதிக தகவல்களை உங்களைச் சேர்க்கும் முடிவில் நீங்கள் காணலாம்.

## 2. முக்கிய குறிப்புகள்

- தயவுசெய்து **இந்த சேர்க்கும் முடிவை மற்றும் ஒரு செல்லுபடியான சுவிஸ் அடையாளப்பத்திரத்தை (படம் உள்ளது, கடவுச்சீட்டு, அடையாளஅட்டை, சாரதி அனுமதிப் பத்திரம், போன்றவை)** கட்டாயம் அங்கத்தவர் கூட்டத்திற்கு எடுத்து வாருங்கள். நீங்கள் இந்த சேர்க்கும் முடிவை வைத்திருக்காவிட்டால், நுழைவாயில் பரிசோதனையின்போது உள்ளே செல்ல அனுமதி மறுக்கப்படும் என்பதோடு அங்கத்தவர் கூட்டத்தில் பங்கேற்க முடியாது.

- நீங்கள் உறுப்பினர் கட்டணத்தை, சேர்க்கும் முடிவில் குறிப்பிட்டுள்ள வங்கிக்கணகிற்கு 4. மார்கழி 2023க்கு உள்ளாக செலுத்தி வரவு வைத்து அதில் சரியான உறுப்பினர் இலக்கத்தைக் குறிப்பிட்டிருந்தாலே, நிச்சயமாக சங்க உறுப்பினராக சேர்க்கப்படுவீர்கள்.

- அங்கத்தவர் கட்டணம் செலுத்தாமலிருந்தால் அல்லது தாமதமானால், அல்லது அங்கத்தவர் இலக்க விபரம் குறிப்பிடாதிருந்தால் அல்லது பிழையாகக் குறிப்பிட்டால், நீங்கள் அங்கத்தவராகச் சேர்க்கப்பட மாட்டீர்கள். இவ்வாறான வேளையில் நீங்கள் 10. மார்கழி 2023 அங்கத்தவர் கூட்டத்தில் பங்கேற்க முடியாது.

- நீங்கள் பல நபர்களது அங்கத்தவர் கட்டணத்தைச் செலுத்த விரும்பினால், தயவுசெய்து பின்வருவனவற்றைக் கவனிக்கவும்:
    - ஒரு அங்கத்தவருக்கான உறுப்பினர் கட்டணம் 150.00 பிராங் ஆகும்.
    - பணம் அனுப்பும் அனைத்து உறுப்பினர்களின் அங்கத்துவ இலக்கத்தை, அதாவது அவர்கள் உங்களிடம் அங்கத்துவக் கட்டணத்தை செலுத்தினால், பணப் பரிமாற்றத்திற்கான நோக்கத்தில் நீங்கள் அவற்றைக் குறிப்பிடுங்கள்.
    - அங்கத்தவர்களுக்கான கட்டணம் குறித்து பணப் பரிமாற்றத்திற்கான நோக்கத்தில் தெளிவாகக் குறிப்பிடாதிருந்தால் அல்லது பணப் பரிமாற்றத்தின் நோக்கத்தில் குறிப்பிட்ட நபர்களின் எண்ணிக்கையுடன் அவர்களுக்கான கட்டணம் சமனாக இல்லாவிடின், அதில் குறிப்பிட்ட அனைத்து அங்கத்தவர்களின் பெயர்களும் சேர்க்கப்படாததாகக் கருதப்படும்.

### 3. அங்கத்தவர்கள் ஒன்றுகூடல் நடைபெறும் விதம்

| நேரம் | செயற்பாடு |
|---|---|
| 13:00 மணி | நுழைவுப் பரிசோதனை<br>குறிப்பு: தயவுசெய்து நுழைவுப் பரிசோதனைக்கு நேரகாலத்துடன் வருகை தாருங்கள். அங்கத்தவர் கூட்டம் 15.00 மணிக்கு ஆரம்பமாகும். தாமதமாக வந்தால் நீங்கள் உரிய நேரத்தில் அங்கத்தவர் கூட்டத்தில் பங்கேற்க முடியும் என்பதை எம்மால் உறுதியாகக் கூறமுடியாது. |
| 15:00 - 15:45 மணி | வரவேற்பு / அறிமுகம் விடய நிர்வாகி |
| 15:45 - 18:30 மணி | கூட்ட நிகழ்வு நடைமுறைப்படுத்தப்படல் |
| 18:30 மணி | எதிர்பார்ப்பின்படி நிகழ்வு நிறைவு * |

*தயவுசெய்து நிகழ்வின் நிறைவில் நீங்கள் உடனயாக மண்டபத்தை விட்டு வெளியேறுங்கள்.

## 4. நுழைவுப் பரிசோதனை

மண்டப வாசலின் முன்பாக ஒரு நுழைவுப் பரிசோதனை இடம்பெறும். இந்த அங்கத்தவர் கூட்டத்திற்கு ஒரு செல்லுபடியான சேர்க்கும் முடிவைக் காண்பிப்பவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள். அத்துடன் அவர்கள் ஒரு செல்லுபடியான சுவிஸ் நாட்டு அடையாளப் பத்திரத்தை (படம் உட்பட) காண்பிக்க வேண்டும்.

**தயவுசெய்து அங்கத்தவர் கூட்டத்திற்கு உங்களை சேர்க்கும் முடிவை கட்டாயமாக எடுத்து வாருங்கள்** மற்றும் **அசலான திணைக்கள அடையாளப் பத்திரத்தையும்** நீங்கள் எடுத்து வாருங்கள், அது உங்கள் அடையாளத்தை உறுதிப்படுத்தும். பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. முக்கியமாக அந்தப் பத்திரத்திலிருக்கும் உங்கள் முதற்பெயர், குடும்பப்பெயர் மற்றும் பிறந்த திகதி போன்றவற்றை ஒரு டொச் வாசிக்கும் நபரால் வாசிக்கக்கூடியதாக இருக்க வேண்டும்.

**தம்மை அடையாளப்படுத்த முடியாத அல்லது விரும்பாத, அல்லது தம்மை சேர்க்கும் முடிவை காண்பிக்க முடியாத அல்லது விரும்பாத, நபர்கள், அங்கத்தவர் கூட்டத்தில் நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள்.**

தயவுசெய்து நுழைவுப் பரிசோதனைக்கு நேரகாலத்துடன் வருகை தாருங்கள். அங்கத்தவர் கூட்டம் 15.00 மணிக்கு ஆரம்பமாகும். தாமதமாக வந்தால் நீங்கள் உரிய நேரத்தில் அங்கத்தவர் கூட்டத்தில் பங்கேற்க முடியும் என்பதை எம்மால் உறுதியாகக் கூறமுடியாது.

மண்டபத்தில் நுழைந்தவுடன் உடனடியாக ஒரு இருக்கையில் அமர்ந்து கொள்ளுமாறு நாங்கள் உங்களைத் தயவாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

## 5. நடந்துகொள்ளும் கடமைகள்

- அறிவுறுத்தல்களை வழங்க அனுமதிக்கப்பட்ட ஒரு நபரால் அல்லது ஒரு பாதுகாப்புச்சேவை அலுவலகரால் கேட்கப்பட்டால், உங்களை சேர்க்கும் முடிவு மற்றும் உங்கள் அடையாளப் பத்திரத்தைக் காண்பிக்க நீங்கள் கடமைப்பட்டுள்ளீர்கள்.

  இதற்கு மறுப்புத்தெரிவித்தால் உங்களை மண்டபத்திலிருந்து வெளியேற்ற முடியும்.

- மண்டபத்தின் நுழைவாயில் முன்பாக உங்களுக்காக சாதாரண மற்றும் வாயு கலந்த தண்ணீர் குடிப்பதற்குத் தயாராக உள்ளது. சொந்த உணவுகள் மற்றும் பானங்களை மண்டபத்திற்குள் எடுத்துச்செல்ல அனுமதியில்லை.

  தற்சமயம் சொந்த உணவுகள் மற்றும் பானங்கள் வைத்திருந்தால், அவற்றை மண்டபத்திற்குள் நுழையும் முன்பாக அகற்றிவிடுங்கள்.

- நீங்கள் அமைதியாக மற்றும் ஒத்துழைத்து நடக்கக் கடமைப்பட்டுள்ளீர்கள்.

- ஒழுங்குமுறையற்று நடந்துகொள்வதாகத் தெரிபவர்கள், மேலும் அங்கத்தவர் கூட்டத்தைக் குழப்பும் நபர்கள், மண்டபத்திலிருந்த வெளியேற்றப்படுவார்கள்.

- அங்கத்தவர் கூட்டத்தில் கேள்வி கேட்ட உங்களுக்கு உரிமையுள்ளது. அங்கத்தவர் கூட்டம் ஒழுங்காக நடைபெறுவதை உறுதி செய்வதற்காக, பேசும் நேரத்தைக் கட்டுப்படுத்தலாம். உங்களுக்கு வழங்கப்படும் பேசும் நேரத்தைக் கடைப்பிடிக்க நீங்கள் கடமைப்பட்டுள்ளீர்கள்.

## 6. அறிவுறுத்தல்களை வழங்க அங்கீகாரம் பெற்ற நபர்கள்

தயவுசெய்து விசேடமாகப் அங்கத்தவர் கூட்டத்தை செயற்படுத்தப் பொறுப்பு வகிக்கும் பின்வரும் நபர்களின் அறிவுறுத்தல்களைக் கடைப்பிடிக்கவும்:



விடய நிர்வாகி
Dr. iur Benjamin Domenig



வழக்கறிஞர்
Lukas Breu



சட்டவல்லுநர்
Edona Ademaj

மேலே குறிப்பிட்டுள்ள நபர்கள் ஒருவரால் அவர்களது ஒரு அறிவுறுத்தலை எவராவது மீறுவதாகத் தெரிந்தால், அவர் அங்கத்தவர் கூட்டத்திலிருந்து வெளியேற்றப்படலாம்.

## 7. நிகழ்ச்சிநிரல்

அங்கத்தவர் கூட்டத்தில் பின்வரும் நிகழ்ச்சிநிரல் டொச்சிலும் மற்றும் பகுதியாக (எங்காவது தேவைப்பட்டால்) தமிழிலும் நடைமுறைப்படுத்தப்படும்:

| இல. | நிகழ்வுகள் |
|---|---|
| 1 | **நிர்வாகசபை தேர்தல்**<br><br>a. தலைவர்.ஃ-வி<br><br>பின்வரும் நபர்கள் பதவிக்குப் போட்டியிடுகின்றனர்:<br><br>(1) Nirojan Nithiyananthan<br>(2) Thirrunavukkarasu (Ravi) Rasiah<br>(3) Parameswaran Arumugam<br>(4) Ragunathan Selliah<br>(5) Kengeswary Jeyarajah<br>(6) Jeyarajah Nadarajah<br>(7) Thevarajah Subramaniam<br>(8) Rajhkumar Sivanathan („Theepan“)<br>(9) Kalaruby Sudhershan<br>(10) Balakrishman Vathany<br>(11) Tharmarasa Balakrishman<br>(12) Balakrishman Pradhosh<br>(13) Anusha Suwasharan<br>(14) Suwiramanijam Suwasharan<br><br>b. உபதலைவர்.ஃ-வி<br><br>பின்வரும் நபர்கள் பதவிக்குப் போட்டியிடுகின்றனர்:<br><br>(1) Vanaja Kumarasamy<br>(2) Anusha Suwasharan<br>(3) Suwiramanijam Suwasharan |

| | |
|---|---|
| | c. பொருளாளர்<br><br>பின்வரும் நபர்கள் பதவிக்குப் போட்டியிடுகின்றனர்:<br><br>(1) Sirkulendran Kandsamy<br><br>(2) Thevarajah Subramaniam<br><br>(3) Elyathamby Tharmaseelan<br><br>d. செயலாளர்<br><br>பின்வரும் நபர்கள் பதவிக்குப் போட்டியிடுகின்றனர்:<br><br>(1) Kodeeswaran Kanagalingam<br><br>(2) Rajhkumar Sivanathan („Theepan“)<br><br>(3) Sutharsan Rajasuntharam<br><br>(4) Vallipuram Ruban<br><br>e. உபசெயலாளர்<br><br>பின்வரும் நபர்கள் பதவிக்குப் போட்டியிடுகின்றனர்:<br><br>(1) Parameswaran Arumugam<br><br>(2) Sivaselvam Rasarathinam<br><br>(3) Rasiah Panpalakan<br><br>f. உடனிருப்பவர்கள்<br><br>(ஒற்றைப்படை எண்ணில் ஆகக்கூடியது ஏழு (7) மேலதிக அங்கத்தவர்கள்)<br>பின்வரும் நபர்கள் பதவிக்குப் போட்டியிடுகின்றனர்:<br><br>(1) Krishnamoorthy Mayarubanan<br><br>(2) Kalyani Yogarajah<br><br>(3) Sayilenthiran Jeyachandran<br><br>(4) Sayilatiran Lavanya<br><br>(5) Ruban Vallipuram Thurairajah<br><br>(6) Suvetha Ruban<br><br>(7) Arulsothy Moganathas<br><br>(8) Vasanthi Kanagalingam |

| | |
|---|---|
| | (9) Elyathamby Tharmaseelan<br>(10) Rasiah Panpalakan |
| 2 | **கட்டிட ஆணையத் தேர்தல்**<br><br>a. தலைவர்.˙.-வி<br>பின்வரும் நபர்கள் பதவிக்குப் போட்டியிடுகின்றனர்:<br>(1) Sivaratnarajah Sinnathamby<br>(2) Kodeeswaran Kanagalingam<br>(3) Kirubaharan Sithambaranathan<br>(4) Balakrishman Vathany<br>(5) Tharmarasa Balakrishman<br>(6) Balakrishman Pradhosh<br><br>b. உப தலைவர்.˙.-வி<br>பின்வரும் நபர்கள் பதவிக்குப் போட்டியிடுகின்றனர்:<br>(1) Parameswaran Arumugam<br>(2) Kirubaharan Sithambaranathan<br>(3) Sutharsan Rajasuntharam<br><br>c. பொருளாளர்<br>பின்வரும் நபர்கள் பதவிக்குப் போட்டியிடுகின்றனர்:<br>(1) Thirrunavukkarasu (Ravi) Rasiah<br>(2) Thevaloganathan Kathiravelan<br><br>d. செயலாளர்<br>பின்வரும் நபர்கள் பதவிக்குப் போட்டியிடுகின்றனர்:<br>(1) Sayilenthiran Jeyachandran<br>(2) Kodeeswaran Kanagalingam<br>(3) Sutharsan Rajasuntharam |

| | |
|---|---|
| | e. உப செயலாளர்<br><br>பின்வரும் நபர்கள் பதவிக்குப் போட்டியிடுகின்றனர்:<br><br>(1) Rajkumar Namasivayam<br><br>f. உடனிருப்பவர்கள்<br>(ஒற்றைப்படை எண்ணில் பத்து [10] தொடக்கம் பதினான்கு [14] வரை)<br>பின்வரும் நபர்கள் பதவிக்குப் போட்டியிடுகின்றனர்:<br><br>(1) Krishnamoorthy Mayarubanan<br>(2) Kalyani Yogarajah<br>(3) Premakanthan Murugupillai<br>(4) Elyathamby Tharmaseelan |
| 3 | **ஒரு இந்துக் குருவைத் தேர்வுசெய்தல்**<br><br>பின்வரும் நபர்கள் பதவிக்குப் போட்டியிடுகின்றனர்:<br><br>(1) Janarthanan Varatharaja |
| 4 | **கணக்காய்வாளர்களைத் தேர்வுசெய்தல் (இரண்டு [2] அங்கத்தவர்கள் நிர்வாகசபையில் அல்லது கட்டிட ஆணையத்தில் பிரதிநிதித்துவம் பெறாதவர்கள்.**<br><br>பின்வரும் நபர்கள் பதவிக்குப் போட்டியிடுகின்றனர்:<br><br>(1) Vaisnave Arumugam Rao<br>(2) Gunaratnam Kandiah<br>(3) Kodeeswaran Kanagalingam<br>(4) Vasanthi Kanagalingam |

**குறிப்பு:**
ஆண்டு அறிக்கைகள் 2019, 2020 மற்றும் 2021 குறித்து அங்கத்தவர் கூட்டத்தில் கதைக்கப்பட மாட்டாது. இந்த ஆண்டறிக்கைகள் 2024 சாதாரண பொதுக்கூட்டத்தில் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## 8. தேர்தல் நடத்துதல்

நிர்வாகசபை, கட்டிட ஆணையம், குருக்கள் மற்றும் கணக்காய்வாளர்களைத் தேர்வு செய்தல் (பார்க்க இத்துடன் உள்ள அங்கத்தவர் கூட்ட அழைப்பு நிகழ்ச்சிநிரல் 1-4) மின்னணு வாக்குப்பதிவு சாதன ரீதியாக பிரத்தியேகமாக நடைபெறும்.

அங்கத்தவர் கூட்ட நுழைவாயில் பரிசோதனையின்போது உங்களுக்கு வாக்குப்பதிவு சாதனம் வழங்கப்படும். இந்தக் கருவியை சரியாக இயக்குவது குறித்து அங்கத்தவர் கூட்ட ஆரம்பத்தில் திரு. Dr. iur. Domenig விளக்குவார்.

வாக்குப்பதிவுச் சாதனத்தைப் பாவிப்பதற்கு ஒரு குறியீட்டு இலக்கம் (Barcode) தேவைப்படும், இது உங்களை சேர்க்கும் முடிவில் குறிப்பிடபட்டிருக்கும் மற்றும் உங்கள் அங்கத்தவர் எண்ணுடன் சேர்க்கப்பட்டிருக்கும்.

நுழைவுப் பரிசோதனையின்போது உங்களது குறியீட்டு இலக்கத்தை ஒரு வாக்களிக்கும் சாதனத்தின் மூலம் பதிவுசெய்வதுடன் அதை தேர்தலுக்குப் பயன்படுத்துவதற்காக உங்களுக்கு வழங்குவோம். நீங்கள் பெற்றுக்கொள்ளும் வாக்களிக்கும் சாதனத்தை எந்தச் சூழ்நிலையிலும் அங்கத்தவர் கூட்டவேளையில் வேறொருவருடன் பரிமாறிக்கொள்ள வேண்டாம் என நாங்கள் தயவாகக் கேட்டுக்கொள்கிறோம். தயவுசெய்து கூட்டம் முடிந்த பின்பு மண்டபத்தை விட்டு வெளியேறும்போது அதை மீளவும் ஒப்படைக்கவும்.

திரு. Dr. iur. Domenig நிகழ்ச்சி நிரல் புள்ளிகள் ஒவ்வொன்றாக உங்களை நடத்திச் செல்வார். தயவுசெய்து அவருடைய வழிமுறைகளைப் பின்பற்றுங்கள்.

**தேர்தல் பின்வருமாறு நடைபெறும்:**

(1) அங்கு குறிப்பிட்ட பதவிக்குப் போட்டியிடும் நபர் குறித்து அறிவிக்கப்படும். மேலதிகமாக அவரது பெயர் ஒரு படத்திரையிலும் காண்பிக்கப்படும்.

(2) திரு. Dr. iur. Domenig உங்களைக் கேட்டுக்கொண்டவுடன், வாக்களிக்கும் சாதனத்தில் உங்கள் வாக்கை வழங்குங்கள். நீங்கள் கவனத்தில் கொள்ளுங்கள், வழங்கப்பட்ட வாக்கை நீங்கள் மீளப்பெற முடியாது. ஆகவே போதுமான நேரத்தை எடுத்துக்கொள்ளுங்கள்.

(3) போட்டியிடும் ஒவ்வொரு நபரும், ஏனையவர்களைவிட அதிக வாக்குகளை முழுவதுமாகப் பெற்றிருந்தால் அவர் அந்தப் பதவிக்கு நியமனம் பெறுவார். தாவது அந்த நபர் ஏனைய அனைத்து வேட்பாளர்களைவிட அதிக வாக்குகளைப் பெற்றிருந்தால் அந்தப் பதவிக்கு நியமனம் பெறுவார்.

அனைத்துப் பதவிகளும்.˙.பொறுப்புகளும் நிரப்பப்படும்வரை தேர்தல் தொடர்ந்து மீள நடத்தப்படும்.

வயது குறைந்த (தீர்ப்பு கூறக்கூடியவர்கள் செயற்படக்கூடியவர்கள்) நபர்கள் அவர்களது வாக்குரிமையை மேலே குறிப்பிட்டுள்ள நிகழ்ச்சிநிரலின்படி தனியாக செய்துகொள்ளலாம்.

தீர்ப்பு கூறக்கூடிய நபர்கள் அவர்களது வாக்குரிமையை தாமாகவே அல்லது சட்டரீதியான அவர்களது பிரதிநிதி மூலமாக செய்துகொள்ளலாம்.

## 9. கேள்விகள் இருப்பின் அதற்கான தொடர்பு நபர்கள்

அங்கத்தவர் கூட்டத்திற்கு முன்பாக கேள்விகள் இருந்தால், நீங்கள் மின்னஞ்சல் (ademaj@domenig.law) ஊடாக அல்லது தொலைபேசியில் (031 380 11 08) திருமதி Edona Ademaj அவர்களைத் தொடர்பு கொள்ளலாம். தயவுசெய்து நீங்கள் கவனத்தில் கொள்ளுங்கள் Frau Ademaj தனியாக பின்வரும் மொழிகளையே பேசுவார்: டொச் மற்றும் ஆங்கிலம்.

அங்கத்தவர் கூட்டத்தின்போது உங்களுக்கு திரு. Dr. iur. Domenig மற்றும் திரு. Breu சமூகமளித்திருப்பார்கள்.